ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
**Department of Examinations, Sri Lanka**
NATIONAL EVALUATION AND TESTING SERVICE

පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல.
**Pelawatta, Battaramulla.**

මගේ අංකය / எமது இல / My No. } DOE 9/3/5/GV/Re- Scrutiny/2026
ඔබේ අංකය / உமது இல / Your No. } ..............................
දිනය / திகதி / Date } 2026.09.02

දුරකථනය / தொலைபேசி / **Telephone** } 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206, 2787207
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } 011-2785231
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS: තැ.පෙ. 1503 කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O. Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Web Address } **www.doenets.lk** **www.results.exams.gov.lk**
E-mail: **exams@doenets.lk**

**சகல அதிபர்களுக்கும்,**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை _ 2026**
**மேன்முறையீடு மீதான விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்தல்**

இப்பரீட்சைப் பெறுபேறுகள் 2026.09.02 ஆம் திகதி வெளியிடப்பட்டதோடு, மேன்முறையீடு தொடர்பான விண்ணப்பங்களை கோரல் 2026.09.07 ஆம் திகதியிலிருந்து 2026.09.21 ஆம் திகதி வரை நிகழ்நிலை (online) ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை முன்வைப்பதோடு இதனுடன் உள்ள அறிவுறுத்தல்களுக்கமைய நடைமுறைப்படுத்துமாறு கேட்டுகொள்கின்றேன்.

1. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்திகோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk இணையத்தளத்தின் Exam Information Centre இல் பிரவேசித்து அல்லது https://onlineexams.gov.lk இல் பிரவேசித்து பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் (User Name) மற்றும் கடவுச்சொல் (Pass word) இனைப் பயன்படுத்தி School Login இற்கு பிரவேசிக்கவும்.

2. மேன்முறையீட்டிற்கான விடைத்தாள் பரீட்சைச் சுட்டெண்ணினை திரையில் காட்டப்படும் பட்டியலில் இருந்த தெரிவு செய்து "Apply" எனும் இடத்திற்கு முன்னால் உள்ள கூட்டினுள் அடையாளமிடுக. சரியாக அடையாளமிட்டிருந்தால் அக்கூடு நீலநிறமாக மாறும் அதன்போது திரையில் காட்டப்படும் பெயர் மற்றும் புள்ளிகள் என்பவை குறித்த சுட்டெண்ணுக்கு உரியதா? எனப் பரீட்சித்து அதனை உறுதிப்படுத்துக.
3. ஏனைய விண்ணப்பதாரிகளின் மேன்முறையீடுகளையும் அவ்வாறே உள்ளிடவும்.
4. மேன்முறையீட்டுக்கு விண்ணப்பதாரிகள் சகலரினதும் தகவல்களை உள்ளடக்கிய சாராம்ச அறிக்கையினை பதிவிறக்கம் (Download) செய்யவும்.

5. அதன் வன் பிரதியுடன் (Hard Copy) ஒவ்வொரு மாணவரினதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை இணைத்து **2026 செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு** முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அதிபர் ஊடாக முன்வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
    - ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் அடைவு தொடர்பில் தனித் தனியாக தயாரிக்கப்பட்ட வகுப்பாசிரியரின் விதப்புரை
    - ஒவ்வொரு விண்ணப்பதாரியும் வெளிப்படுத்தியுள்ள விசேட திறன்கள் மற்றும் திறமைகள் தொடர்பான தனித்தனியாக அறிக்கை.

    பரீட்சை ஆணையாளர் நாயகம்,
    பாடசாலை பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை,
    இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
    த.பெ.இல 1503, கொழும்பு.

6. அனுப்பப்படும் சகல ஆவணங்களினதும் பிரதியொன்றினை அதிபர் வைத்திருத்தல் கட்டாயமானது.
7. நிகழ்நிலை முறையில் மாத்திரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, 2026.09.21 ஆம் திகதிக்கு பின்னர் எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.
8. விண்ணப்பிக்கும் போது ஏற்படும் தொழில்நுட்பத் தடங்கல் சம்பந்தமாக நிகழ்நிலை கிளையினைத் தொடர்பு கொள்ளவும். (011 3661122 / 011 3671568)

ஒப்பம்: A.K.S. இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்